சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **81/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | சுந்தர் |
| தந்தை பெயர் | : | முத்துசாமி |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | பெயிண்டர் |
| வயது | : | 35 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

சம்பவம் நடந்த அன்று இருட்டாக இருந்தது என்று சொன்னால் ஆமாம் இருட்டுதான். சம்பவ தேதியன்று குறிப்பாக கூட்டமாக இருந்த காரணத்தினால் யார் ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசியது யார் என தெரியாது என சொன்னால், ஆமாம் தெரியாதுதான், ஆனால் யாரோ ஜாதி பெயரை சொல்லி

பேசினார்கள். அந்த இருட்டு நேரத்தில் கூட்டமாக வந்த நபர்கள்தான் எங்களை தாக்கினார்கள் என்றும், அதில் இருந்தவர்கள் யார் யார் என குறிப்பாக தெரியாது என சொன்னால், ஆமாம். முதல் விசாரணையில் எதன் காரணமாக எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு தாக்கினார்கள் என சொன்னேன் என்றால் போலீசார் சொல்லிக்கொடுத்ததால் சொல்லிவிட்டேன்.

**அரசு தரப்பு மறு விசாரணை**

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

உண்மையில் நான் முதல் விசாரணையில் சொன்னது போல் இந்த எதிரிகள் தான் என்னை தாக்கினார்கள் என்றும், எதிரி செந்தில்தான் ஜாதி பெயரை சொல்லி திட்டினார் என்றும், தற்பொழுது எதிரிகளை காப்பாற்ற வேண்டி முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு மாறாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:38:29 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.